தினமணி

**நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடையவில்லை: வேளாண் பல்கலை. துணைவேந்தர்**

First Published : 29 Jul 2011 09:06:25 AM IST

கோவை, ஜூலை 28: நவீன தொழில்நுட்பங்கள் இன்னும் விவசாயிகளைச் சென்றடையாத நிலை இருக்கிறது என்று, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.முருகேசபூபதி தெரிவித்தார்.

÷கோவை மாவட்ட சிறுதொழில்கள் சங்கம் (கொடிசியா), வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் அக்ரிஇண்டெக்ஸ் 2011 வேளாண் கண்காட்சி, கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் வியாழக்கிழமை தொடங்கியது.

÷வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் இக் கண்காட்சியைத் துவக்கிவைத்து துணைவேந்தர் முருகேசபூபதி பேசியது:

÷வேளாண்மையில் புதிய புதிய தொழில்நுட்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆயினும், நவீனத் தொழில்நுட்பங்கள் இன்னும் விவசாயிகளை சென்றடையாத நிலை இருக்கிறது. அதற்காகவே கொடிசியாவுடன் இணைந்து இதுபோன்ற கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

÷கரும்பு உற்பத்தியைப் பெருக்க புதிய தொழில்நுட்பத்தை வேளாண் பல்கலை. வெளியிட்டது. இதன் காரணமாக தற்போது கரும்பு சாகுபடியில் தமிழகம் முன்னிலையில் இருக்கிறது.

÷ஒருபுறம் மக்கள்தொகை அதிகரித்து வந்தாலும், விவசாயப் பணிக்கு ஆள்பற்றாக்குறை கடுமையான பிரச்னையாக இருக்கிறது. இதனால் விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்குவது அவசியமாகிறது.

÷தற்போது நெல் சாகுபடியின் பல்வேறு நிலைகளுக்கும் இயந்திரயமாக்கப்பட்டு, நூறு சதவீத இயந்திரமயமாக்கல் ஆகிவிட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு பயிர்களுக்கும் இயந்திரமயமாக்குவது குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

÷அண்மைக்காலமாக விவசாயப் பயிர்களுக்கு, மாவுப்பூச்சி பெரும் சவாலாக இருந்தது. 56 வகையான பயிர்கள் இப்பூச்சியால் பாதிக்கப்பட்டன. இதைக் கட்டுப்படுத்த இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுண்ணி, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

÷கடந்த 6 மாதங்களில் 10 லட்சம் விவசாயிகளுக்கு ஒட்டுண்ணிகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த மருந்துகள் தான் பரிந்துரைக்கப்பட்டன. ஒட்டுண்ணிகள் வழங்கப்பட்டதன் மூலம் விவசாயிகளின் செலவினம் ரூ. 140 கோடி மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

÷கடந்த ஆண்டில் மட்டும் 2 லட்சம் விவசாயிகள் வேளாண் கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்த ஆண்டு அதைவிட அதிகமானோர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

÷கொடிசியா தலைவர் எம்.கந்தசாமி, அக்ரி இண்டெக்ஸ் தலைவர் கே.வி.சசிதரன், கெü்ரவ செயலர் எஸ்.சுருளிவேல், வேளாண் பல்கலை. விரிவாக்கக் கல்வி இயக்குநர் பி.கலைச்செல்வன் உள்ளிட்டோர் பேசினர்.

÷பல்வேறு மாநிலங்கலைச் சேர்ந்த வேளாண்சார் நிறுவனங்கள், வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் ஏறத்தாழ 200 அரங்குகளை அமைத்துள்ளன. கண்காட்சி நடைபெறும் நாள்களில் வேளாண் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**வேதனையில் தேயிலை விவசாயிகள்!**

ஜி.வின்சென்ட் குமார்

First Published : 29 Jul 2011 08:49:37 AM IST

கோத்தகிரி, ஜூலை 28: பசுந்தேயிலை விலை வீழ்ச்சி தொடர்வதால் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டு தேயிலை விவசாயிகள் பிழைப்பு தேடி சமவெளிப் பகுதிகளுக்கு இடம் பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் 12-ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகளும் 25-ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளும், பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களும் உள்ளனர். இம்மாவட்டத்தில் உள்ள கூடலூர்,

உதகை,குன்னூர்,மஞ்சூர் போன்ற பகுதிகளில் 20 சதவீதம் தேயிலை விவசாயமும், 80 சதவீதம் சீதோஷ்ண நிலைக்கேற்ப காய்கறி விவசாயம்,காபி,மிளகு,மற்றும் வாசனைத் திரவியங்களும் பயிரிடப்படுகின்றன. கோத்தகிரியில் 90 சதவீத மக்கள் தேயிலையையும்,தேயிலை தொழிற்சாலையையும் நம்பியே வாழ்கின்றனர்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு கெண்டை பனி கொட்டியதால் தேயிலையை நோய் தாக்கியது. தொடர்ந்து கோடை வெயில் சுட்டெரித்ததால் தேயிலை மகசூல் குறைந்தது. இதனால், பசுந்தேயிலைக்கு அடிப்படை விலை ரூ.12.50 கொடுக்கப்பட்டது. முதல் தரமுள்ள தேயிலைக்கு ரூ.16 வரை கொடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு இந்த விலை ஓரளவு போதுமானதாக இருந்தது.

ஆனால் தற்போது தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் பசுந் தேயிலை விளைச்சல் அதிகரித்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், தொழிற்சாலைகள் அதிகபட்ச தேயிலையை வாங்க மறுப்பதோடு கோட்டாமுறையை (கோட்டாமுறை என்பது தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக இருப்பவர்களிடம் எவ்வளவு கிலோ பசுந்தேயிலை கொள்முதல் செய்ய முடியும்

என்பதை ஏற்கனவே தெரிவித்து விடுவதாகும்) அமல்படுத்தியுள்ளதால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

ஒரு விவசாயியின் தோட்டத்தில் 1000 கிலோ தேயிலை விளைந்தால் அதில் கோட்டாமுறைப்படி அவரிடம் 400 அல்லது 500 கிலோ மட்டுமே தொழிற்சாலை பெறமுடியும். மீதமுள்ள 500 கிலோ பசுந்தேயிலை பறிக்கப்படாமலேயே விட்டு விடுவதால் வீணாகி விடுகிறது.

தேயிலை வரத்து மிகவும் அதிகரித்து வருவதால் கிலோ ரூ.15 என இருந்த தேயிலை தற்போது கிலோ ரூ.5 ஆகக் குறைந்துள்ளது. இதில் முன்பணம் ரூ.2 பிடித்தம் போக மீதி ரூ.3 மட்டுமே கிடைக்கிறது. இந்தத் தொகையில் உரம், சுத்திகரிப்பு என அதிகபட்ச செலவு ஏற்படுவதால் இறுதியில் இலை பறித்தவருக்கு கடன் வாங்கி கூலி கொடுக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர் விவசாயிகள்.

மாவட்டத்தில் பிற பகுதியைக் காட்டிலும் கோத்தகிரி மக்கள் 90 சதவீதம் தேயிலையை மட்டுமே நம்பி இருப்பதால் தேயிலைக்கும் விலை இல்லாமல் போகும்போது இதனையே நம்பி இருக்கும் விவசாயிகளின் கவனம் முழுவதும் தற்போது கந்து வட்டி கடைகள் பக்கமே திரும்பியுள்ளது. இதில் பலர் ஏற்கனவே வட்டி கட்டமுடியாமல் தோட்டத்ததை கந்து வட்டிக்காரர்களிடமே விட்டுவிட்டு வேலைதேடி கோவை, திருப்பூர் என சமவெளிப் பகுதிக்குப் போய்விட்டனர்.

மீதமுள்ளவர்கள் உரிய வருமானம் இல்லாததால் தங்கள் பிள்ளைகளை பள்ளி, கல்லூரிகளில் சேர்க்க முடியாமல் திணறி வருகின்றனர்.

கடந்த ஆட்சியில் தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது மானியம் கொடுக்கப்பட்டது. அதேபோல் இந்த அரசும் மானியம் கொடுத்து உதவுமா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர் விவசாயிகளும், தோட்டத் தொழிலாளர்களும்.

அடுத்த சில மாதங்களும் மழை காலமே என்பதால் தேயிலை மகசூல் அதிகரிக்கவே செய்யும். எனவே பசுந்தேயிலைக்கு அடிப்படை விலையை அரசே முடிவு செய்து அறிவிக்க வேண்டும்.

லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்காலத்தை காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் விவசாயிகள்.

**ஆடி, புரட்டாசி பட்டங்களுக்கு ஏற்ற கேழ்வரகு சாகுபடி**

First Published : 28 Jul 2011 02:03:56 PM IST

கோவை: குறுதானியப் பயிர்களில் மிக முக்கியமானது ராகி எனப்படும் கேழ்வரகு; கிராமப்புற மக்களின் உணவில் கேழ்வரகு முக்கிய இடம் வகிக்கிறது. மாவு, புரதம், தாது, வைட்டமின், நார்ச்சத்து போன்ற சத்துக்கள் இதில் உள்ளன.

÷பருவமழை அதிகமாகக் கிடைக்கக் கூடிய ஜூலை, ஆகஸ்ட் வரையிலான ஆடிப்பட்டம், செப்டம்பர், அக்டோபர் வரையிலான புரட்டாசிப் பட்டத்தில் கேழ்வரகு பயிரிடலாம்.

÷இதுகுறித்து வேளாண் பல்கலை.யின் சிறுதானியத்துறையைச் சேர்ந்த அ.நிர்மலகுமாரி, பெ.வீரபத்திரன் ஆகியோர் தரும் தகவல்கள்:

÷தமிழகத்தில் 94 ஆயிரம் ஹெக்டேரில் மானாவாரியாக கேழ்வரகு பயிரிடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 1.70 லட்சம் டன் கேழ்வரகு செய்யப்படுகிறது. ஹெக்டேருக்கு சராசரியாக 1,887 கிலோ தானிய விளைச்சல் கிடைக்கிறது.

கேழ்வரகுக்கு ஏற்ற மண்வகை: கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் தென்மாவட்டங்களிலும் குறிப்பிட்ட அளவுக்கு பயிரிடப்படுகிறது.

÷இறவைப் பயிராக சித்திரை, ஆடி, மார்கழிப் பட்டங்களிலும், மானாவாரியாக ஆடி, புரட்டாசிப் பட்டங்களில் கேழ்வரகு பயிரிடலாம். அனைத்து வகையான நிலமும் பயிரிட ஏற்றது. செம்மண், இருமண் கலந்த நிலங்கள் கேழ்வரகு விளைச்சலுக்கு ஏற்றவையாக இருக்கின்றன.

ரகங்களும் சிறப்பியல்புகளும்: மிக அதிக விளைச்சலைத் தரக்கூடிய பல ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வறட்சி மற்றும் நோயைத் தாங்கி வளரக்கூடிய பல ரகங்களை வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது.

கோ 9 - ஹெக்டேருக்கு 4,500 கிலோ வரை சாகுபடி கிடைக்கக் கூடியது. தானியம் வெண்மை நிறத்தில் இருக்கும். மாவுத் தன்மை அதிகம் என்பதால் மதிப்பூட்டக் கூடிய பொருள்கள் தயாரிக்கலாம். இதில் அதிக புரதச்சத்து உள்ளது.

கோ 13 - ஹெக்டேருக்கு 3,500 கிலோ வரை கிடைக்கும். வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. இது மானாவாரி, இறவைக்கு ஏற்றது.

கோ (ரா) 14 - ஹெக்டேருக்கு 2,800 கிலோ வரை சாகுபடி செய்ய முடியும். அதிக புரதம், சுண்ணாம்புச் சத்து உடைய ரகமான இது, குலைநோயைத் தாங்கி வளரக்கூடியது.

கே 7 - ஹெக்டேருக்கு 3,000 கிலோ விளைச்சல் கிடைக்கும். மானாவாரி, இறவைக்கு ஏற்ற ரகம்.

டி.ஆர்.ஒய் 1 - ஹெக்டேருக்கு 4 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் பெற முடியும்; களர், உவர் நிலத்துக்கு ஏற்றது.

பையூர் 1 - ஹெக்டேருக்கு 3,125 கிலோ விளைச்சல் கிடைக்கும்; வறட்சியைத் தாங்கக்கூடியது; நீண்ட விரல் ரகம்; மானாவாரி, இறவைக்கு ஏற்றது.

பையூர் (ரா) 2 - ஹெக்டேருக்கு 3,150 கிலோ விளைச்சல் கிடைக்கக் கூடியது. சாயாத தன்மை, குலைநோய்க்கு எதிர்ப்பு தன்மையைக் கொண்டது இது.

**உணவுப் பொருள்கள் தயாரிப்பு பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்**

First Published : 28 Jul 2011 11:45:01 AM IST

தஞ்சாவூர், ஜூலை 27: சிறு தானியங்கள், தானியங்களிலிருந்து உணவுப் பொருள்கள் தயாரிப்பது குறித்து பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று இந்திய பயிர்ப்பதன தொழில்நுட்பக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சாவூரிலுள்ள இந்திய பயிர்ப்பதன தொழில்நுட்பக் கழகத்தில் ஆகஸ்ட் 3, 4-ம் தேதிகளில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. தமிழ், ஆங்கில மொழிகளில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் ரூ. 1,000 கட்டணம் செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்யலாம்.

நேரில் வந்து பெயரை பதிவு செய்ய இயலாதவர்கள் பயிற்சி கட்டணத்தை வரைவோலை மூலம் இயக்குநர் என்ற பெயரில் தஞ்சாவூரில் உள்ள பேங்க் ஆப் இந்தியாவில் செலுத்தும் வகையில் எடுத்து, இயக்குநர், இந்திய பயிர்ப்பதன தொழில்நுட்பக் கழகம், உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் (இந்திய அரசு), புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் - 613005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04632- 228155 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இந்தப் பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**மேல்கொடுங்காலூரில் கரும்பு அறுவடை செயல்விளக்கம்**

First Published : 28 Jul 2011 10:32:44 AM IST

திருவண்ணாமலை, ஜூலை 27: கீழ்கொடுங்காலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் நவீன இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்யும் பயிற்சி மேல்கொடுங்காலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விவசாயி ராமலிங்கத்தின் நிலத்தில் நடைபெற்ற பயிற்சியை தொடங்கி வைத்து கூட்டுறவு இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன் பேசியது:

வேளாண்மையில் ஆள்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 159 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், 110 சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டு நவீன வேளாண் கருவிகளான கோணவீடர், ரோட்டாவீடர், பவர்டில்லர், மினிடிராக்டர், கரும்பு தோகையை துகள்களாக்கும் இயந்திரம், நெல் நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், நெல் கதிர் அடிக்கும் இயந்திரம் ஆகியவை வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தற்போது புதிதாக கீழ்கொடுங்காலூர் கிராமத்தில் ரூ.6.9 லட்சம் செலவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி வளர்ச்சி நிதியில் இருந்து சங்கத்துக்கு கரும்பு வெட்டும் நவீன கருவி, தோகை உரிக்கும் கருவி, கரும்பு கட்டுக்களை லாரியில் ஏற்றும் கருவி போன்றவை வாங்கப்பட்டுள்ளன. இவை குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு தரப்படும்.


இதற்காக செயல்முறை விளக்கப் பயிற்சி தரப்பட்டுள்ளது. இதன் மூலம் 700 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தற்போது 1 ஏக்கர் கரும்பை வெட்டுவதற்கு குறைந்தது 5 நாள்களில் 20 பேர் தேவைப்படுகின்றனர். தற்போது இந்த நவீன கருவியின் மூலமாக குறைந்தபட்சம் 5 முதல் 10 பேர் மட்டுமே தேவைப்படுகின்றனர். கரும்புவெட்டும் செலவு குறையும் என்றார்.

துணைப்பதிவாளர் சி.மனோகரன், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு நிர்வாக அலுவலர் முருகன், சார்-பதிவாளர்கள் அன்புக்கரசு, பெ.மணி, மைய வங்கி களமேலாளர் வெற்றிவேல், வளர்ச்சி அலுவலர் துரைராஜன், சங்கச் செயலர் சுப்பிரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**உணவுப் பாதுகாப்பு மசோதா டிசம்பரில் தாக்கல்: கே.வி.தாமஸ்**

First Published : 29 Jul 2011 02:51:23 AM IST



சென்னை, ஜூலை 28: ஏழைகளுக்கு மானிய விலையில் அரிசி, கோதுமை உள்ளிட்ட தானியங்கள் வழங்கும் உணவுப் பாதுகாப்பு சட்ட மசோதா வரும் டிசம்பரில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய உணவுத் துறை இணையமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.

சென்னையில் இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் சார்பில் உணவுப்பொருள் கிடங்குகள் அமைப்பது தொடர்பான மாநாட்டை வியாழக்கிழமை தொடங்கிவைத்த பிறகு நிருபர்களிடம் அவர் கூறியது:

உணவுப் பாதுகாப்பு வரைவு சட்ட மசோதாவுக்கு அமைச்சர்களின் குழு அனுமதி வழங்கியுள்ளது. இப்போது இந்த மசோதா சட்ட அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்பிறகு, மத்திய அமைச்சரவையின் ஒப்புதலோடு நாடாளுமன்றத்தில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படும். அடுத்த ஆண்டிலிருந்து இதைச் செயல்படுத்தும் நோக்கில், டிசம்பர் மாதத்திலேயே இந்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.


உணவுப் பொருள்கள் சேமிப்பு, அவற்றைக் கொண்டுசெல்லும் முறை குறித்து ஆராய்வதற்காக மத்திய அரசு ஆய்வு நடத்த உள்ளது. நவீன வசதிகளுடன் கூடிய கிடங்குகளை அமைப்பது, தானியங்கள் உற்பத்தி செய்யப்படும் மாநிலங்களிலிருந்து பயன்படுத்தும் மாநிலங்களுக்கு வாகனங்களில் கொண்டுசெல்வது ஆகியவை குறித்து முக்கியமாக ஆய்வு நடத்தப்படும்.

உணவுப்பொருள் சேமிப்புக் கிடங்குகளை நவீனப்படுத்துவது தொடர்பாக, மத்திய திட்டக் குழுவும் விரிவாக ஆராய்ந்து வருகிறது. மாநில அரசுகளும் கிடங்குகளை நவீனப்படுத்தி வரும் நிலையில், நாட்டின் உணவு உற்பத்தி 55 மில்லியன் டன்னிலிருந்து 60 மில்லியன் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கிறோம்.

உணவுப் பொருள்களுக்கு வழங்கும் மானியத்தை ரூ.60 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.1 லட்சம் கோடியாக அதிகரிப்பது குறித்தும் பரிசீலித்து வருகிறோம் என்றார் தாமஸ்.

**மேட்டூர் அணையில் இருந்து ஆகஸ்ட் 2-ல் தண்ணீர் திறப்பு**

First Published : 29 Jul 2011 01:43:32 AM IST



சென்னை, ஜூலை 28: மேட்டூர் அணையில் இருந்து மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்ப் பாசனத்துக்காக ஆகஸ்ட் 2-ம் தேதியிலிருந்து தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, வியாழக்கிழமை அவர் வெளியிட்ட உத்தரவு: மேட்டூர் அணையில் இருந்து மேட்டூர் கிழக்கு, மேற்குக் கரை கால்வாய் பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்து விடும்படி சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வந்தன.

அவர்களது கோரிக்கையை ஏற்று ஆகஸ்ட் 2-ம் தேதி முதல் 137 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும்.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் 17,230 ஏக்கர் நிலங்களும், சேலம் மாவட்டத்தில் 16,443 ஏக்கர் நிலங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 11,327 ஏக்கர் நிலங்கள் என மொத்தம் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

**பூண்டி ஏரிக்கு வந்த 2 டி.எம்.சி. கிருஷ்ணா நீர்**

First Published : 29 Jul 2011 02:33:12 AM IST



வேகமாக நீர் மட்டம் உயர்ந்து வரும் பூண்டி ஏரி. (உள்படம்) நீரின் அளவை (29.87 அடி) காட்டும் அளவுகோல்.

திருவள்ளூர், ஜூலை 28: ஜூன் மாதம் கண்டலேறு அணை திறக்கப்பட்டதில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வழியாக இதுவரை 2.06 டிஎம்சி தண்ணீர் பூண்டி ஏரியை வந்தடைந்துள்ளது.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி பூண்டி ஏரியின் நீர்மட்டம் 29.87 அடியாக உள்ளது. இதே நிலையில் நீர் வரத்து இருந்தால் வேகமாக பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயரும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை குடிநீர் தேவையின் முக்கிய ஆதாரமாக விளங்குவது பூண்டி ஏரி. இந்த ஏரியில் சேமித்து வைக்கப்படும் தண்ணீர் இணைப்புக் கால்வாய் வழியாக செம்பரம்பாக்கம், சோழவரம், செங்குன்றம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சென்னை குடிநீருக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடும் கோடை வெயிலால் மொத்தமுள்ள 35 அடி நீர்மட்டத்தில் 23 அடியாக நீர்மட்டம் குறைந்தது. இந்த ஏரியை நம்பியுள்ள செம்பரம்பாக்கம், சோழவரம், செங்குன்றம் ஏரிகளிலும் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் சென்னை குடிநீர் தேவை பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவானது.


இதையடுத்து கடந்த மே மாதம் பொறுப்பேற்ற அதிமுக அரசு ஆந்திர மாநில அரசை கேட்டுக் கொண்டதின் பேரில் கடந்த ஜூன் மாதம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டது.

கடந்த ஜூன் 23-ம் தேதிமுதல் இன்று வரை பூண்டி ஏரிக்கு 2.06 டிஎம்சி தண்ணீர் வந்துள்ளது. மேலும் வியாழக்கிழமை காலை நிலவரப்படி கிருஷ்ணா கால்வாய் வழியாக வினாடிக்கு 800 கன அடி நீர் வரத்து உள்ளது. இதையொட்டி பூண்டி ஏரியில் இருந்து இணைப்புக் கால்வாய் வழியாக செம்பரம்பாக்கம் ஏரிக்கு வினாடிக்கு 440 கன அடி நீரும், பூண்டி நீரேற்று நிலையத்துக்கு வினாடிக்கு 20 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது.

தினமலர்

உணவுப் பொருள் பணவீக்கம்7.33 சதவீதமாக குறைந்தது

ஜூலை 29,2011,00:04




புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், ஜூலை 16ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 7.33 சதவீதமாக குறைந்துள்ளது. இது, 20 மாதங்களுக்கு பிறகு மிகவும் குறைவான அளவாகும்.

ஜூலை 9ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம் 7.58 சதவீதமாக இருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள்களுக்கான பணவீக்கம், 11.89 சதவீதத்திலிருந்து, 12.12 சதவீதமாக அதிகரித்துள்ளது. பருப்பு வகைகள் விலை, ஆண்டுக் கணக்கில், 8 சதவீதம் குறைந்துள்ளது.அதேசமயம், வெங்காயம் 22.66 சதவீதம் என்ற அளவிலும், பழங்கள் 13.90 சதவீதம் என்ற அளவிலும் உயர்ந்திருந்தது. மேலும், உருளைக்கிழங்கு (10.55 சதவீதம்), பால் (9.96 சதவீதம்), காய்கறிகள் (7.59 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.உணவு சாராத பொருள்கள் மீதான பணவீக்கம், இதே வாரங்களில், 15.50

சதவீதத்திலிருந்து, 16.05 சதவீதமாக அதிகரித்துள்ளது. இப்பிரிவில், நூலிழைகள் விலை 28 சதவீதமும், எண்ணெய் வித்துக்கள் 13.72 சதவீதமும், தாதுப்பொருள்கள் 23.12 சதவீதமும் உயர்ந்திருந்தன.உணவுப் பொருள் பணவீக்கத்தை குறைக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.குறிப்பாக நாட்டின் பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, சென்ற செவ்வாய்கிழமையன்று, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை 0.50 சதவீதம் உயர்த்தியது.நடப்பாண்டு ஜூன் மாதத்தில், மொத்த விலைக்குறியீட்டு எண் அடிப்படையில், கணக்கிடப்படும் நாட்டின் பொதுப் பணவீக்கம் 9.44 சதவீதம் என்ற அளவில் அதிகரித்திருந்தது.இந்நிலையில், ரிசர்வ் வங்கி அதன் காலாண்டு ஆய்வறிக்கையில், நடப்பு நிதியாண்டின் இறுதியில், பணவீக்கம் 7 சதவீதமாக இருக்கும் என, மறுமதிப்பீடு செய்துள்ளது. முன்பு, 6 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆகியோர் கையொப்பமிட்டனர்.

**டெல்டா விவசாயத்துக்கு 1,319 டன் உரம் வருகை**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,00:14 IST

கும்பகோணம்: டெல்டா மாவட்ட விவசாய பயன்பாட்டுக்காக 1,319 டன் உரம் ரயில் மூலம் கும்பகோணத்திற்கு நேற்று வந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நடப்பு பருவத்தில் குறுவை சாகுபடி தீவிரமடைந்துள்ளது. தற்போது நாற்றங்கால் தயாரிப்பு, நடவு பணி தீவிரமடைந்துள்ள நிலையில் இம்மாதம் இறுதிக்குள் குறுவை பருவத்தினை முடிக்க தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதை தொடர்ந்து விவசாயிகளுக்கு உரம் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன்படி தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்திலிருந்து 22 ரயில் வேகன்களில் 756.600 டன் யூரியா, 313.250 டன் காம்ப்ளக்ஸ், 249.400 டன் டி.ஏ.பி ரம் உள்பட மொத்தம் 1,319.250 டன் உரங்கள் வந்து கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு நேற்று வந்தது. அதை 100க்கும் மேற்பட்ட லாரிகளில் ஏற்றி தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**மானிய விலையில் விதை நெல் வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,22:55 IST

கடலூர் : கடலூர் வட்டாரத்தில் சம்பா பருவத்திற்கான விதை நெல் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குனர் இளவரசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடலூர் வட்டாரத்தில் சம்பா பருவத்திற்கு சான்று பெற்ற பொன்மணி, ஆடுதுறை-39 ரக விதை நெல்கள் கீழ்குமாரமங்கலம் மற்றும் தூக்கணாம்பாக்கம் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து மானிய விலையில் வழங்கப்படுகிறது. கிலோவிற்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 28.5 டி.எம்.சி., குறுவை சாகுபடிக்கு திறந்தது 66 டி.எம்.சி.,**

பதிவு செய்த நாள் : ஜுலை 29,2011,01:08 IST

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு கடந்த இரு மாதங்களில், 28.5 டி.எம்.சி., நீர் மட்டுமே வந்துள்ள நிலையில், குறுவை சாகுபடிக்காக, 66 டி.எம்.சி., நீர் திறக்கப்பட்டுள்ளது. காவிரி நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்புப்படி, கர்நாடகா அரசு ஆண்டுதோறும், மேட்டூர் அணைக்கு, 205 டி.எம்.சி., நீர் வழங்க வேண்டும். ஆண்டு தோறும் ஜுன் 1 முதல் மே 31 வரை ஒரு ஆண்டிற்கான நீர்வரத்து கணக்கிடப்படும். அதன்படி, கடந்த ஜுன் 1 முதல் நேற்று வரை மேட்டூர் அணைக்கு, 49 டி.எம்.சி., நீர் திறந்திருக்க வேண்டும். ஆனால், 28.5 டி.எம்.சி., நீர் மட்டுமே மேட்டூர் அணைக்கு வந்துள்ளது. இன்னும், 20.5 டி.எம்.சி., நீர் வர வேண்டியுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து, ஜுன் 6 முதல் டெல்டா குறுவை சாகுபடிக்காக, நீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று வரை மொத்தம், 65 டி.எம்.சி., நீர் சாகுடிக்கு திறக்கப்பட்டுள்ளது. இது மேட்டூர் அணைக்கு கடந்த இரு மாதங்களில் கிடைத்த நீர்வரத்தை விட 37.5 டி.எம்.சி., நீர் கூடுதலாகும். கடந்த இரு மாதங்களில், அணைக்கு கிடைத்த நீரை விட இரண்டரை மடங்கு நீர் பாசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளது. நேற்று அணை நீர்மட்டம் 84.400 அடியாகவும், நீர் இருப்பு 46.483 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் குறைந்துள்ளதால் கபினி உபரி நீர்திறப்பு, நேற்று விநாடிக்கு, 9 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. அதனால், நேற்று விநாடிக்கு, 14 ஆயிரத்து 521 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து வரும் நாட்களில் குறைந்து விடும்.

**திருந்திய நெல் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,00:00 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கார் மற்றும் முன் சம்பா பட்டத்தில் நெல் நடவு பணி தொடங்கியுள்ள நிலையில், விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து இரட்டிப்பு மகசூல் பெற வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து வேளாண் இணை இயக்குனர் நாச்சியப்பன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கார் மற்றும் முன் சம்பா பருவத்தில், 10 ஆயிரம் ஹெக்டேர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் விவசாயிகளின் நலன் கருதி வழக்கமாக ஆகஸ்ட் 2ம் தேதி திறப்பதற்கு பதிலாக கடந்த ஜூன் 19ம் தேதி கிருஷ்ணகிரி அணை மற்றும் பாரூர் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதை பயன்படுத்தி, மாவட்டம் முழுவதும் நெல் நடவுப்பணி தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது நெல் நடவு மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளும் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து இரட்டிப்பு மகசூல் பெறலாம். திருந்திய நெல் சாகுபடி முறை என்பது நடைமுறையில் இருந்து வரும் நெல் சாகுபடி முறைகளில் சில மாற்றங்களை கொண்ட புதிய முறையாகும். திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நடவு வயலை இடை உழவுக்கு பின் நான்கு புறமும் ஏற்றதாழ்வின்றி நீர் சமமாக நிற்கும் வண்ணம் சரியான முறையில் வயலை சமப்படுத்த வேண்டும். மண் பரிசோதனை அட்டவணைப்படி உரமிடுதல் வேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் பொது பரிந்துரையாக, 50 சதம் தழைச்சத்தையும், முழு அளவு மணிச்சத்தையும் மற்றும் 50 சதம் சாம்பல் சத்தையும் அடியுரமாக இடவேண்டும். நாற்று விட்டு, 13 முதல் 15 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நடவுக்கு உபயோகிக்க வேண்டும். நாற்றுகளை பிரித்து எடுத்து, 25 செ.மீ இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக 3 செ.மீ., ஆழத்திற்கு மிகாமல் மார்கர் கருவியினை பயன்படுத்தி மேலாக நடவு செய்ய வேண்டும். நீர் மறைய நீர் கட்டி மண்ணின் மேல் பரப்பில் லேசான வெடிப்புகள் தோன்றிய பின் மறுபடியும் நீர் பாய்ச்ச வேண்டும். இந்த முறையை பஞ்சு கட்டும் வரை கையாள வேண்டும். அதன் பின் அறுவடைக்கு முன்பு வரை மண்ணை காயவிடாமல் நீர் கட்ட வேண்டும். மண்ணின் மேற்பரப்பில் லேசான வெடிப்புகள் ஏற்பட்டால் காற்றோட்டம் மேம்படுவதுடன், 30 முதல் 35 சதவீதம் நீரும் சேமிக்கப்படும். திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் நடவு செய்த, 10,20, 30 மற்றும் 40வது நாளில் கோனோவீடர் கருவியை கொண்டு பயிர்களுக்கு குறுக்கும் நெடுக்குமாக உருளவிடவேண்டும். இதனால் களைகள் கட்டுப்படுத்துவதுடன் அவை அந்த வயலுக்கே இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. கோனோவீடர் கருவி மண்ணை புரட்டி விடுவதால் காற்றோற்றம் கிடைக்கிறது. பழைய வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் உருவாக்கப்படுகிறது. இதனால் புதிய தி வாய்ந்த வேர்கள் மூலமாக அதிக அளவு திகளை மண்ணில் இருந்து எடுத்து பயிருக்கு அளித்து வளமான பயிர்கள் உருவாக்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடி மூலம் மகசூல் அதிகரிப்பது விவசாயிகள் கோனோவீடர் களை கருவியினை எத்தனை முறை பயன்படுத்துகிறார்களோ அதனை பொறுத்து

அமைக்கிறது. குறைந்தது 3 முறையாவது கோனோவீடர் கருவியை விவசாயிகள் பயன்படுத்த ணேவ்டும். எனவே, கார் மற்றும் முன் சம்பா பட்டத்தில் நெல் நடவு செய்யும் அனைத்து விவசாயிகளும் தவறாது திருந்திய நெல் சாகுபடி முறையை கையாண்டு இரட்டிப்பு மகசூல் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தொடர் மழையால் வெல்லம் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,00:44 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் பெய்து வரும் தொடர் மழையால் எரிபொருளாக பயன்படுத்தப்படும் கரும்பு சருகுகள் காயாததால் வெல்லம் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கோபி, கொளப்பலூர், கடத்தூர், கணக்கம்பாளையம், சிறுவலூர், குறவம்பாளையம், புஞ்சை துறையம்பாளையம், பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, அத்தாணி, வெள்ளாங்கோவில், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உருண்டை வெல்லம் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பு சாற்றை பெரிய கொப்பரையில் ஊற்றி ஒரு மணி நேரம் வரை அடுப்பில் பதப்படுத்தி, வெல்லம் தயாராகும். கரும்பு சாற்றை பதப்படுத்த, சாறு பிழியப்பட்ட கரும்பு சருகுகளை காய வைத்து எரிபொருளாக பயன்படுத்துவர். ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, பவானி, நம்பியூர், பவானிசாகர் மற்றும் டி.என்.பாளையம் வட்டாரங்களில் சென்ற ஒரு வாரமாக மழை பெய்கிறது. தொடர் மழையால் ஏற்பட்ட குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வெல்லம் உற்பத்தியில் கடும் பாதித்துள்ளது. சாறு பிழியப்பட்ட கரும்பு சருகுகளை காய வைக்க முடியாமல் வெல்ல உற்பத்தியாளர்கள் திணறுகின்றனர். தென்னை, பனை மட்டைகளை எரிபொருளாக பயன்படுத்தி அடுப்பு எரிய வைக்கின்றனர். மழையால் அடுப்புகளில் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால், வெல்லம் உற்பத்தி செய்ய முடியவில்லை. எரிபொருட்கள் கைவசம் இல்லாததால் சில ஆலைகளில் வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. வெல்ல உற்பத்தியாளர்கள் கூறியதாவது: ஆடி பண்டிகைக்கு வெல்லம் விற்பனை நன்றாக இருக்கும் என எதிர்பார்த்தோம். நடப்பாண்டு வெல்லம் விற்பனை சரியாக இல்லை. விற்பனை இல்லாததால் வெல்லம் விலை கிலோவுக்கு 1.50 ரூபாய் குறைந்துள்ளது. 30 கிலோ மூடை உருண்டை வெல்லம் 720 முதல் 780 ரூபாய் வரையும், அச்சு வெல்லம் 740 முதல் 800 ரூபாய் வரையும், நாட்டு சர்க்கரை 1,300 முதல் 1,470 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நாட்டு சர்க்கரை விலை மட்டும் மூடைக்கு 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மஞ்சள் விலை உயர்வால் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் பலர் மஞ்சளுக்கு மாறிவிட்டனர். கரும்பு உற்பத்தி சென்றாண்டு முதல் குறைவாக உள்ளது. கரும்பு உற்பத்தி குறைவால் சில வாரத்துக்கு முன் வெல்ல உற்பத்தி

ஆலைகள் மூடப்பட்டது. 50 சதவீத ஆலைகள் மட்டும் இயங்குகிறது. இன்னும் ஓரிரு மாதத்தில் வெல்லம் விலை உயரும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வெங்காயத்தை "ஸ்டாக்' வைக்க விவசாயிகள் ஆயத்தம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,21:42 IST

பொங்கலூர் : சின்ன வெங்காயம் விலை சரிந்து வருவதால், வெங்காயத்தை இருப்பு வைப்பதற்கான பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பொங்கலூர் வட்டார பகுதிகளில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 28 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. பின், படிப்படியாக குறைந்து, கடந்த வாரம் கிலோ 16 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.
தற்போது வெங்காய அறுவடை சீசன் என்பதால், அதிக வரத்து காரணமாக விலை இறங்குமுகத்தில் உள்ளது. வியாபாரிகள் முதல்தர வெங்காயத்தை மட்டுமே விரும்பி கொள்முதல் செய்கின்றனர். இரண்டாம் தர வெங்காயம் கிலோ ரூ.10, 12 என்ற விலைகளில் கொள்முதல் செய்யப்படுகிறது.மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்தால், நஷ்டம் ஏற்படும் என்பதால், சில விவசாயிகள் வெங்காயத்தை இருப்பு வைக்க முடிவு செய்துள்ளனர். இதற்காக, தற்காலிகமாக, நல்ல காற்றோட்டமுள்ள இடங்களில் பட்டறைகளை அமைத்து வருகின்றனர். ஈரப்பதம் இல்லாமல், இயற்கை முறையில் பாதுகாக்கப்படும் வெங்காயம் மூன்று மாதம் வரை கெட்டுப்போவதில்லை. பாதுகாக்கப்படும் வெங்காயத்தை அடுத்த போகம் சாகுபடி செய்யும் விவசாயிகள், விதைக்காக நல்ல விலை கொடுத்து வாங்கிச்செல்கின்றனர். மேலும், வரும் மாதங்களில் வெங்காய சீசன் முடிவடைவதால், விலை உயர்வு தவிர்க்க முடியாததாக இருக்கும். இதனால், விவசாயிகள் வெங்காயத்தை இருப்பு வைப்பதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**ஆக., 8ல் தேனீ வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,21:24 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில் வரும் ஆக., 8ம் தேதி தேனீகளை வளர்க்கும் முறை குறித்த பயிற்சி வகுப்பு நடக்கிறது. பல்கலையில் வரும் ஆக., 8ம் தேதி தேனீ வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி வகுப்பு நடக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி நாளான வரும் ஆக., 8ம் தேதி காலை 9.00 மணிக்குள் தமிழ்நாடு வேளாண் பல்கலையின் வேளாண் பூச்சியியல் துறைக்கு வந்து, 150 ரூபாய் பயிற்சி கட்டணம் செலுத்தி பயிற்சியில் பங்கேற்கலாம். விபரங்களுக்கு, "பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலை வளாகம், மருதமலை ரோடு, கோவை - 641 003 என்ற முகவரியிலோ அல்லது 0422 - 661 1214 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பண்ணையில் அழகு செடிகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,22:57 IST

ரெட்டியார்சத்திரம் : ரெட்டியார்சத்திரம் அரசு தோட்டக்கலை பண்ணையில் மரவகை கன்றுகள், அழகுச்செடிகள், குறைந்தவிலைக்கு விற்கப்படுகின்றன. தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறியது: ரெட்டியார்சத்திரத்திலுள்ள அரசு தோட்டக்கலைப்பண்ணையில் செம்பருத்தி, குரோட்டன்ஸ், துராண்டா, அலமேண்டா, கூப்பியா, நந்தியவட்டை, ஜரிசின், இக்சேரா போன்ற அழகுச்செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.மரவகை கன்றுகளான தேக்கு, சில்வர்ஓக், மகாகனி, குமிழ், சவுக்கு, ஸ்போத்டியா, வேம்பு, நாவல் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கன்று ஒன்றின் விலை ஐந்து ரூபாய். விவசாயிகள், பொதுமக்கள், கல்வி நிறுவனங்கள் பெற்று பயனடையலாம், என்றார்.

**மானிய விலையில் தென்னை "டானிக்'**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,22:55 IST

வடமதுரை : வடமதுரை வட்டார தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு 25 சதவீத மானிய விலையில், தென்னை டானிக் வினியோகிப்படுகிறது. தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வராஜ் கூறியது: தென்னை மரங்களில் அதிக விளைச்சலுக்கு தேவையான பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சாலிசைலிக் அமிலம், ஆக்சின் ஹார்மோன், சிட்ரிக் அமிலம், அஸ்கார்பிக் அமிலம் அடங்கியுள்ளது. ஒரு மரத்திற்கு 200 மிலி தென்னை டானிக்கை எடுத்து, இளஞ்சிவப்பு நிறமுள்ள

வேரை கத்தி மூலம் சாய்வாக சீவி, பாலிதீன் பையில் வைக்க வேண்டும். ஆறு மாதத்திற்கு பின், இரண்டாம் முறை பயன்படுத்தலாம். தோட்டக்கலைத்துறை பணியாளர்கள் மூலம் பெறலாம், என்றார்.

**இயற்கை உரமாக பூண்டு கழிவுகளை பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கு லாபம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,23:25 IST

பெரியகுளம் : இலவசமாக கிடைக்கும் இயற்கை உரமாக மாறும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் லாபம் பெறுகின்றனர். பெரியகுளம் அருகே வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் வெள்ளைப்பூண்டு கழிவுகளை இயற்கை உரமாக அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இன்றைய காலகட்டத்தில் விவசாயிகள், உடனடி விளைச்சலுக்காக மண்ணை காயப்படுத்துகின்றனர். ரசாயன உரங்களை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

பாதிப்பு: தொடர்ந்து ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட நிலம் ஐந்தாண்டுகளுக்கு பிறகு மண்ணின் வளம் குறைந்து விளைச்சல் பாதிக்கிறது. அதன் பிறகு விவசாயிகள் மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தை அதிகப்படுத்த சிரமப்படுகின்றனர். சிறிதளவாவது இயற்கைக்கு மாறும் விவசாயிகள் மண்ணை உழுது, இயற்கை உரங்களான மாட்டுசாணம், புண்ணாக்கு கரைசல் உட்பட கீரைச்செடிகளை போட்டு பயிர் செய்கின்றனர்.

லாபம்: பெரியகுளம் பகுதி விவசாயிகள் இலவசமாக கிடைக்கும் இயற்கை உரமான வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறுகின்றனர். விவசாயி குமரவேல் கூறுகையில், வெள்ளைப்பூண்டின் தலையிலிருந்து, அடிப்பகுதி வரை பயன்பாட்டிற்கு உதவுகிறது. இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை சேகரித்து, நிலத்தில் கொட்டி உழும் போது, மண்ணில் தீங்கு விளைவிக்கும் வேர்புழுக்கள் மடிகின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. வாழை, கரும்பு, தென்னை பல்வேறு வகையான பயிர்களும் விளைச்சல் அதிகரித்து லாபம் கிடைக்கிறது,'என்றார்.

**மாங்காய்க்கு விலையில்லை : பெரியகுளம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2011,23:26 IST

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் விளைச்சல் இல்லாமலும், விலை கிடைக்காததாலும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பெரியகுளம் பகுதிகளான கோயில்காடு, சுக்காம்பாறை, தொண்டைகத்தி, சோத்துப்பாறை, கும்பக்கரை,ஈஞ்சம்மலை உள்ளிட்ட பல இடங்களில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக மாந்தோப்புகள் உள்ளது. இப்பகுதியில் மே முதல் ஆகஸ்ட் வரை மா விளைச்சல் அதிகம் இருக்கும். கேரளா, கர்நாடகா, கோவா, குஜராத் ஆகிய வெளிமாநிலங்களுக்கும், சென்னை, மதுரை, கோவை, திருச்சி உட்பட உள்ளூர் மார்க்கெட்டுகளுக்கும் இங்கிருந்து மாங்காய்கள் அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு மா விளைச்சல் குறைந்ததுள்ளது. விலையும் எதிர்பாத்தபடி இல்லை. முதல் தரமான மாங்காய்களான பங்கனபள்ளி, மல்கோவா, கல்லாமை, காளைப்பாடி, செந்தூரம் கடந்தாண்டில் விற்பனையானதை விட விலை குறைவாக விற்கப்படுகிறது.

கவலை: பெரியகுளம் பகுதிகளில் அதிகமாக கிடைக்கும் காசா மாங்காய் கடந்தாண்டு ஒரு டன் (ஆயிரம்கிலோ) 25 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் வரை விற்றது. இந்தாண்டு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தினத் தந்தி

## கேரளாவில் தென்னை மரங்களை பாதுகாக்க ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு கொச்சி தென்னை நலவாரியம் தகவல்

*கோழிக்கோடு,ஜூலை.29–*

*கேரளாவில் தென்னை மரங்களை பாதுகாக்க ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கொச்சி தென்னை நலவாரியம் தெரிவித்து உள்ளது.*

*தென்னை மரங்கள்*

*கேரள மாநிலத்தில் அதிக அளவில் தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக திருவனந்தபுரம், கொல்லம், திருச்சூர் மாவட்டங்களில் அதிகளவு தென்னை மரங்கள் உள்ளன. கேரளாவில் தென்னை மரங்களை பாதுகாக்க கொச்சியில் தென்னை நல வாரியம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இது மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வருகிறது. திருவனந்தபுரம், கொல்லம், திருச்சூர் மாவட்டங்களில் மொத்தம் 50 பஞ்சாயத்துகள் உள்ளன.*

*இந்த பஞ்சாயத்துக்களில் 17.825 ஹெக்டெர் பரப்பளவில் தென்னை மரங்கள் நடப்பட்டுள்ளன. மரங்கள் அடிக்கடி பூச்சி தாக்குவதால் தேங்காய் விளைச்சல் குறைந்து கொண்டு வருகிறது. இதனை தடுக்க கொச்சியில் செயல்பட்டுவரும் தென்னை நல வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

*ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு*

முதல் கட்டமாக நோய் தாக்கிய தென்னை மரங்களை வெட்டி அகற்றவும், புதிய மரங்களை நடவு செய்யவும், நோய் தாக்குதலை கட்டுப்படுத்த தரமான மருந்துகளை தெளிக்கவும் விவசாயிகளை அறிவுறுத்தி வருகிறது. இதற்காக ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திருவனந்தபுரம், கொல்லம், திருச்சூர் மாவட்டங்களில் மொத்தம் 17,120 விவசாயிகள் உள்ளனர். ஒரு விவசாயிக்கு ரூ.13 ஆயிரம் வீதம் நிதி வழங்கப்படுகிறது. அவர்கள் அந்த நிதியை கொண்டு புதிய மரங்களை நடவு செய்யவும், நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மருந்துகளை வாங்கலாம். மேலும் தென்னை ஓலையில் பூச்சி தாக்குதல் இருந்தால் ஓலைகளை வெட்ட வேண்டும் என்றும் விவசாயிகளை தென்னை வாரியம் கேட்டுக்கொண்டு உள்ளது. இதன் மூலம் தென்னை மரங்களை அழிவில் இருந்து காக்கவும், தேங்காய் விளைச்சலை அதிகரிக்கவும் முடியும்.
இந்த தகவலை கொச்சி தென்னை நலவாரியம் தெரிவித்து உள்ளது.

## கடந்த 20 மாதங்களில் இல்லாத அளவிற்கு உணவு பொருள் பணவீக்கம் 7.33 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள் பணவீக்கம் ஜூலை 16–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த 20 மாதங்களில் இல்லாத அளவிற்கு 7.33 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 7.58 சதவீதமாக இருந்தது.
கடந்த 2010–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் மூன்றாவது வாரத்தில் இது 18.56 சதவீதமாக இருந்தது. ஆக, உணவு பொருள் பணவீக்கம் ஓரளவிற்கு குறைந்து வருகிறது.
பருப்பு வகைகள்
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் விலை 8 சதவீதம் குறைந்துள்ள நிலையில், இதர பொருள்கள் விலை உயர்ந்துள்ளது. வெங்காயம் மற்றும் பழங்கள் விலை முறையே 22.66 சதவீதம் மற்றும் 13.90 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் மற்றும் காய்கறிகள் விலை முறையே 9.96 சதவீதம் மற்றும் 7.59 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், உருளைக்கிழங்கு விலை 10.55 சதவீதம் உயர்ந்துள்ளது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.13 சதவீதத்திலிருந்து 10.49 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில்

இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது.
உணவு பணவீக்கம் சற்று குறைந்துள்ள நிலையில், உணவு சாரா பொருள் பணவீக்கம் 15.50 சதவீதத்திலிருந்து 16.05 சதவீதமாக உயர்ந்துள்ளது.
பெட்ரோல்
கடந்த ஜூன் 24–ந் தேதி அன்று மத்திய அரசு பெட்ரோல், மண்எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலையை உயர்த்தியது. இதன் தாக்கத்தால், எரிபொருள் பணவீக்கம் 11.89 சதவீதத்திலிருந்து 12.12 சதவீதமாக உயர்ந்துள்ளது.
உணவு பொருள் பணவீக்கம் குறைந்து வருவது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று நிம்மதி அளிப்பதாக அமைந்துள்ளது. அதேசமயம், கடந்த மே மாதத்தில் 9.06 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம், ஜூன் மாதத்தில் 9.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், ரிசர்வ் வங்கி கடந்த செவ்வாய்க்கிழமை அன்று 'ரெப்போ ரேட்' விகிதங்களை 0.50 சதவீதம் உயர்த்தியது.
விளைபொருள்கள்
உள்நாட்டில் தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் பொருள்கள் கிடைக்காததாலும், சர்வதேச அளவில் விளைபொருள்கள் விலை உயர்ந்து வருவதாலும், நடப்பு நிதி ஆண்டில் பொது பணவீக்கம் 7 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி மறு மதிப்பீடு செய்துள்ளது. முதலில் 6 சதவீதமாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்து இருந்தது.

## ஜூன் மாதத்தில் யூரியா உர உற்பத்தி 2 சதவீதம் அதிகரிப்பு



இந்தியாவில், ஜூன் மாதத்தில் யூரியா உர உற்பத்தி நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 17.77 லட்சம் டன்னைக் காட்டிலும் 2 சதவீதம் அதிகரித்து 18.10 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.
இதே மாதத்தில் பல்வேறு மாநிலங்களுக்கு மொத்தம் 24.74 லட்சம் டன் யூரியா அனுப்பப்பட்டுள்ளது. இதில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் அடங்கும். அநேகமாக எல்லா மாநிலங்களிலும் யூரியாவிற்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் அளிப்பு 30.63 லட்சம் டன்னாக இருந்தது.
நடப்பு பருவத்தில் ஜூன் 30 வரையிலான காலத்தில் சுமார் 58.98 லட்சம் டன் யூரியா விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 46.90 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, விற்பனை 26 சதவீதம் உயர்ந்துள்ளது.
யூரியாவைத் தவிர இதர உரங்களின் விலை நிர்ணயத்தில் அரசு கட்டுப்பாடுகள்

*தளர்த்தப்பட்டுள்ளன.*

*ஜூன் மாதத்தில் மொத்தம் 3.74 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. டீ.ஏ.பி. உரம் 8.40 லட்சம் டன் இறக்குமதியாகி உள்ளது. என்.பி.கே. மற்றும் எம்.ஓ.பி. ஆகிய உரங்களின் இறக்குமதி முறையே 2.28 லட்சம் டன் மற்றும் 40,000 டன்னாக இருந்தது.*

தினகரன்

**உணவு பணவீக்கம் 7.33% ஆக குறைந்தது**

பதிவு செய்த நாள் : 7/29/2011 0:52:16



சென்னை : தானியங்களின் விலை சரிவால் கடந்த 16ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் 7.33 சதவீதமாக குறைந்தது. இது கடந்த 20 மாதங்களில் இல்லாத அதிகபட்ச குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. மொத்த விலை குறியீட்டெண்படி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்ட சில பொருட்களில் விலை உயர்ந்தாலும், தானியங்களில் விலை 8 சதவீதமாக குறைந்தது. அதனால் முந்தைய வாரத்தில் 7.58 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம், ஜுலை 16ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 7.33 (0.25) சதவீதமாக குறைந்தது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் இது 18.56 சதவீதமாக இருந்தது.